பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
15 06 2025 6 45
ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- பிரதமர் திரு. நரேந்திர மோடி சைப்ரஸ், கனடா, குரோஷியா ஆகிய நாடுகளுக்கு 5 நாள் அரசுமுறைப் பயணமாக இன்று புறப்பட்டுச் செல்கிறார்.
- நாடு கடந்த 11 ஆண்டுகளில் மிகப்பெரிய அளவில் வளர்ச்சியடைந்துள்ளதாக மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் கூறியுள்ளார்.
- டெல்டா பாசனத்திற்காக கல்லணையில் இருந்து இன்று தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.
- மதுரை மாவட்டத்தில் காவல் நிலையத்தை தாக்கியவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாநில அரசை அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி கேட்டுக்கொண்டுள்ளார்.
- போர்ச்சுகல் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா – பிரான்சின் **Alice Robbe** இணை பட்டம் வென்றது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி சைப்ரஸ், கனடா, குரோஷியா ஆகிய நாடுகளுக்கு 5 நாள் அரசுமுறைப் பயணமாக இன்று புறப்பட்டுச் செல்கிறார்.

புதுதில்லியில் இருந்து காலை புறப்படும் பிரதமர், முதற்கட்டமாக சைப்ரஸ் செல்கிறார்.

தனது பயணத்தின்போது அந்நாட்டின் அதிபர் திரு. **Nikos Christodoulides** உள்ளிட்ட தலைவர்களை சந்தித்துப் பேசுவார்.

பின்னர் கனடா செல்லும் பிரதமர், ஜி-7 நாடுகளின் உச்சிமாநாட்டில் பங்கேற்கிறார்.

இந்தியா திரும்பும் முன் வரும் 18ஆம் தேதி பிரதமர் குரோஷியா செல்கிறார்.

<<<<>>>>

நாடு கடந்த 11 ஆண்டுகளில் மிகப்பெரிய அளவில் வளர்ச்சியடைந்துள்ளதாக மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் கூறியுள்ளார்.

அசாம் மாநிலம் திப்ருகரில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர். மக்கள் நலன் சார்ந்த அரசின் தலைமையால் இளைஞர்கள் புதுமையான தொழில்நுட்பத்தில் சாதனை படைத்து வருவதாக கூறினார்.

2014ஆம் ஆண்டு 30 ஆயிரம் ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் இருந்த நிலையில், தற்போது அது ஒரு லட்சமாக அதிகரித்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

சாலைகள், ரயில்வே, இணைய தொடர்பு, துறைமுகம் உள்ளிட்ட உள்கட்டமைப்பு விரிவாக்கம் மிகப்பெரிய அளவில் நடைபெற்று வருவதாகவும் அவர் கூறினார்.

கடந்த 10 ஆண்டுகளில் 25 கோடிக்கும் அதிகமானோர் வறுமையில் இருந்து மீட்கப்பட்டுள்ளனர் என்றும் திரு. சோனோவால் தெரிவித்தார்.

<<<<>>>>

மேட்டூர் அணை திறக்கப்பட்டதையடுத்து, காவரி டெல்டா பாசனத்திற்காக கல்லணையி இருந்து இன்று தண்ணீர் திறந்துவிடப்பட உள்ளது.

இதையொட்டி கல்லணையில் இன்று நடைபெறும் விழாவில் முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் கலந்துகொண்டு அணையில் இருந்து தண்ணீரை திறந்துவிட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

சேலத்தில் உள்ள ஆவின் பால் பண்ணையில் புதிதாக தொடங்கப்பட்டுள்ள தானியங்கி பால் பதப்படுத்தும் நிலையத்தால், மாவட்டத்தில் பால் கொள்முதல் 6 லட்சம் லிட்டரில் இருந்து, 8 லட்சம் லிட்டராக அதிகரிக்கும் என்று சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

சேலத்தில் நேற்று பயிற்சியாளர் தங்கும் விடுதி கட்டிடத்தைப் பார்வையிட்டு ஆய்வு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பால் கொள்முதல் அதிகரித்து வரும் நிலையில், அதற்கேற்ப கட்டமைப்புகளும் அதிகரிக்கப்பட்டு வருவதாக கூறினார்.

தானியங்கி முறையில் இயந்திரங்கள் இயக்கப்படுவதால் பால் பொருட்களை தயாரிக்கும்போது இழப்புகள் மிக மிக குறைவாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

உற்பத்தியாளர்கள் வழங்கும் அனைத்து பாலையும் கொள்முதல் செய்வதன் மூலம் உற்பத்தியாளர்களுக்கு லாபகரமான விலையை உறுதி செய்ய முடியும் என்றும் அவர் கூறினார்.

ஏற்றுமதி தர நிலைகளை பூர்த்தி செய்யும் வகையில் புதிய ஆலை அமைந்துள்ளதாகவும் திரு. ராஜேந்திரன் தெரிவித்தார்.

<<<<>>>>

மதுரை மாவட்டம் திருமங்கலம் அருகேயுள்ள வி.சத்திரப்பட்டி காவல் நிலையம் தாக்கப்பட்டது குறித்து அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி அதிர்ச்சி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில், மர்ம நபர்கள் காவல் நிலையத்தை தாக்கி சூறையாடி உள்ளதை பார்க்கும்போது திமுக ஆட்சியில் பொதுமக்களுக்கு மட்டுமல்ல காவல்துறையினருக்கும் பாதுகாப்பில்லாத நிலை உருவாகியுள்ளதாக குற்றம் சாட்டினார்.

இந்த தாக்குதலில் ஈடுபட்டவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மாநில அரசை அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

காவல்நிலையம் தாக்கப்பட்டதற்கு மத்திய இணையமைச்சர் திரு. எல். முருகனும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் நாளுக்கு நாள் கொலை, கொள்ளை உள்ளிட்ட குற்றங்கள் அதிகரித்து வருவதாகவும், இத்தகைய குற்றங்கள் மீது காவல்துறையினர் நடவடிக்கை எடுக்க தயங்குவதாகவும் சமூக வலைதளத்தில் அவர் தெரிவித்துள்ளார்.

தாக்குதலில் ஈடுபட்டவர்களை உடனடியாக கைது செய்வதுடன், சம்பவம் குறித்து முழுமையான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் முதலமைச்சரை திரு. எல். முருகன் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் சார்பில் உதவி ஆட்சியர், காவல்துறை துணை கண்காணிப்பாளர், வணிவரி உதவி ஆணையர் உள்ளிட்ட இடங்களுக்கு காலியிடங்களை நிரப்புவதற்கான தேர்வு இன்று மாநிலம் முழுவதும் நடைபெறுகிறது.

இந்தத் தேர்வை 2 லட்சத்து 49 ஆயிரம் பேர் எழுத உள்ளனர்.

சென்னையில் மட்டும் 170 மையங்களில் இதற்கான தேர்வு நடைபெற உள்ளது.

தேர்வெழுத வருவோர் காலை மணி 8.30க்குள் அனுமதிச் சீட்டுடன் தேர்வுக்கூடத்திற்கு வர வேண்டும் என்று பணியாளர் தேர்வாணையம் அறிவுறுத்தியுள்ளது.

<<<<>>>>

வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக தமிழகத்தின் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இன்று லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நீலகிரி மாவட்டத்தின் ஓரிரு இடங்களில் கன முதல் அதிகனமழையும், கோவை, திருநெல்வேலி மாவட்டங்களின் மலைப் பகுதிகள், தேனி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களின் ஒருசில இடங்களில் கனமழையும் பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரோடு, சேலம், தருமபுரி, திருப்பூர், திண்டுக்கல், மதுரை, விருதுநகர் மாவட்டங்களின் ஒருசில இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் வானிலை மையம் கூறியுள்ளது.

இந்நிலையில், மேற்குத்தொடர்ச்சி மலைப் பகுதியில் பெய்து வரும் மழை காரணமாக நெல்லை மாவட்டத்தில் மணிமுத்தாறு மற்றும் களக்காடு அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

இதனால் பாதுகாப்பு கருதி சுற்றுலாப் பயணிகள் அருவிகளில் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

*<u>இருவரிச் செய்திகள்</u>*

மேற்காசியாவில் பதற்றத்தை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்று இஸ்ரேல் மற்றும் ஈரான் நாடுகளை அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப்பும், ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புடினும் கேட்டுக்கொண்டுள்ளனர்.

<<<<>>>>

எரிசக்தி, தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளில் இந்தியா – பிரான்ஸ் இடையே ஒத்துழைப்பு அதிகரித்து வருவதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

உலக தந்தையர் தினம் இன்று கொண்டாடப்படுகிறது. இதையொட்டி பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

<<<<>>>>

வங்கக் கடல் பகுதியில் மீன்பிடி தடைக்காலம் முடிந்து மீனவர்கள் இன்று அதிகாலை முதல் மீன்பிடிக்க கடலுக்குள் சென்றனர்.

<<<<>>>>

கள்ளக்குறிச்சியில் நேற்று நடைபெற்ற தேசிய மக்கள் நீதிமன்றத்தில் 2 ஆயிரத்து 259 வழக்குகளுக்கு தீர்வு காணப்பட்டது.

<<<<>>>>

ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் அருகே கள்ளநோட்டு வைத்திருந்ததாக ஒருவரை காவல்துறையினர் கைது செய்து அவரிடம் இருந்து சுமார் 4 லட்சம் ரூபாய் மதிப்புள்ள கள்ள நோட்டுகளை பறிமுதல் செய்தனர்.

<<<<>>>>

புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர்களுக்கு ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனம் மூலம் செல்போன் பழுதுநீக்குதல், பிளம்பிங் உள்ளிட்ட பயிற்சிகள் வழங்கப்பட உள்ளதாக மாவட்ட ஆட்சியர் திருமதி அருணா தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

சென்னையை சேர்ந்த தகவல் தொழில்நுட்ப ஊழியரிடம் டிஜிட்டல் கைது என்று கூறி சுமார் 30 லட்சம் ரூபாய் பணத்தை அபகரித்த வழக்கில் காவல்துறையினர் ஒருவரை கைது செய்துள்ளனர்.

<<<<>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

போர்ச்சுகல் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா – பிரான்சின் **Alice Robbe** இணை பட்டம் வென்றது.

மகளிர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை, 1-6, 6-4, 10-8 என்ற செட் கணக்கில் ஜப்பானின் **Hiromi Abe – Konako Morisaki** இணையை வென்றது.

<<<<>>>>

ப்ரோ ஹாக்கி லீக் போட்டியின் மகளிர் மற்றும் ஆடவர் பிரிவில் இந்தியா - ஆஸ்திரேலியா இடையேயான இரண்டாவது ஆட்டம் இன்று நடைபெறுகிறது.

<<<<>>>>

பெல்ஜியத்தில் நடைபெற்று வரும் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான மகளிர் ஜூனியர் ஹாக்கிப் போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் இந்தியா வெற்றி பெற்றது.

<<<<>>>>

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டங்களில் திண்டுக்கல் - சேலம் அணியையும், சேப்பாக் அணி – கோவை அணியையும் வென்றன.

இன்று நடைபெற உள்ள ஆட்டங்களில் திருப்பூர் - திருச்சி அணியையும், சேலம் - நெல்லை அணியையும் எதிர்கொள்கின்றன.

<<<<>>>>